(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 268]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 ஏப்பிறல் 10, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1958/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக்கேட்பதற்கு,— (2)

(அ) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள சிலாபம் பொது வைத்தியசாலையில் தற்போது நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறை காரணமாக பிரதேச மக்கள் தமது சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சிலாபம் பொது வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை துரிதமாக நிறைவு செய்து பிரதேச மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) இதற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2201/ '11

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டில் அமைச்சினால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீட்டு நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் இலவசமாகவா வழங்கப்படுகின்றன என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வீடுகள் விற்கப்படும் அல்லது வாடகைக்கு விடப்படும் விலையினையும்;

(iii) அந்த வீடுகள் என்ன அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2282/ '12

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் ஊர்வலத்தை நடத்துவதற்காகச் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(ii) தலதா ஊர்வலத்திற்காக தலதா மாளிகையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iii) இதற்காக அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iv) பணம் வழங்கிய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(v) தனியார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(vi) பணம் வழங்கிய தனியார் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லையின் பொருட்டு வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2328/ '12

4.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சமமான கடமையில் ஈடுபடும் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள், இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இணைக்கப்பட்டு சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு ஓய்வூதிய சம்பள முறைக்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களின் சேவை நிரந்தரமாக்கலானது பொலிஸ் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் இடம்பெற்றதா என்பதையும்;

(ii) இவர்களுக்கு பொருத்தமான சீருடையையும் கடமையில் ஈடுபடும் போது தகவல் குறிப்பு புத்தகத்தில் கடமைக்கு சமுகமளிப்பதை பதிவதற்கான அனுமதியையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சம்பள உயர்வு, வலய கொடுப்பனவு, பிரயாணச் செலவு, கஷ்டப் பிரதேச கொடுப்பனவு, இதர கொடுப்பனவுகள் என்பன சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி தொடக்கம் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வாறு செலுத்தப்படாவிடின் மேற்படி சலுகைகளை இவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2969/ '12

5\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 7 மாத காலப்பகுதியில் இந்நாட்டில் 200 இற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மேலும் 1590 பாடசாலைகள் மூடப்படக்கூடிய ஆபத்துக்கு உள்ளாகியுள்ளன என்பதையும்;

(iii) பாடசாலை வகைப்படுத்தல்களின் கீழ் நவீன வசதிகளைக் கொண்ட பாடசாலைகளை ஏற்படுத்துவதாக அரசாங்கம் கூறியுள்ள போதிலும், அவ்வாறான ஒரு பாடசாலையையேனும் காண முடியவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசாங்கத்தினால் வகைப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வகைப்படுத்தலின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலை வகைப்படுத்தலின் கீழ் ஒரு பாடசாலைக்காக ஒதுக்கப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இலவசக் கல்வியின் சமமான உரிமைகளை உயர்ந்தபட்சம் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவியாயமைகின்ற அரசாங்க பாடசாலைகள் மூடப்படுவதற்கு இடமளிக்காது, அவற்றை நவீனமயப்படுத்தி நாட்டின் எதிர்கால சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1961/ '11

6\.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அங்குணுகொலபெலஸ்ஸ மாவட்ட வைத்தியசாலையில் நிலவுகின்ற கடுமையான பௌதீக மற்றும் மனித வள பற்றாக்குறை காரணமாக பிரதேச மக்கள் பல பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதையும்;

(ii) இங்கு சில கட்டிடங்கள் மறுசீரமைக்கப்படாத காரணத்தால் கைவிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அங்குணுகொலபெலஸ்ஸ மாவட்ட வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகளைத் துரிதமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், வைத்தியசாலையின் மறுசீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை எவ்வளவு என இனங்காணப்பட்டுள்ளதா;

(ii) அதன் பிரகாரம் ஒவ்வொரு துறையிலுமுள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2330/ '12

7.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவைக்கு உதவுவதற்காக 2006.08.02 ஆம் திகதிய 16/1395/206/052 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) யுத்த சூழல் நிலவிய காலத்தில், தேசிய முக்கியத்துவம்மிக்க வைபவங்கள் மற்றும் பல்வேறு அனர்த்த சந்தர்ப்பங்களில் சிவில் பாதுகாப்பு அலுவலர்கள் பூரண அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) சிவில் பாதுகாப்புத் திணைக்களம் 2009.12.15 ஆம் திகதி வெளியிட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய 2009.10.31 ஆம் திகதியன்று தொடர்ச்சியாக 180 நாட்கள் சேவையை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களின் சேவையை துரிதமாக நிரந்தரமாக்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது சிவில் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்டொகுதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சேவையின் பல்வேறு துறைகளிலும் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு அலுவலருக்கும் தற்போது செலுத்தப்படுகின்ற நாளாந்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்ற மேற்படி திணைக்கள ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்கி நிலையான சம்பள நிலையில் வைத்து அரசாங்க ஊழியர்களுக்கு உரித்தான சகல சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) அதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2384/ '12

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க ஔடதக் கூட்டுத்தாபனத்தின் ஊழல்களை அல்லது முறைகேடுகளை புலனாய்வு செய்வதற்காக புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர் நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நியமனத்தை மேற்கொண்ட அதிகாரி யாரென்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் உரித்தாகும் ஏனைய வசதிகள் யாவையென்பதையும்;

(v) நியமிக்கப்பட்ட திகதி தொடக்கம் இன்றுவரை இந்த உத்தியோகத்தரால் புலனாய்வு செய்யப்பட்டுள்ள ஊழல்கள் அல்லது முறைகேடுகள் யாவையென்பதையும்;

(vi) அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vii) இவரது சேவைக்காலம் முடிவுக்கு வரும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2468/ '12

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணி வழங்குதல் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்;

(ii) யாரால் அத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேற்படி இத்திட்டத்திற்காக 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில்,

(i) நன்மைபெறும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) உண்மையிலேயே செலவிட்ட தொகை யாதென்பதையும்;

வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) பாடசாலைச் சீருடைக்காக வழங்கப்படுகின்ற துணி வகைகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவைகளா அல்லது இறக்குமதி செய்யப்பட்டவைகளா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2013, ஏப்பிறல் மாதம் 23ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

2.

கௌரவ ஜோன் அமரதுங்க,— சிறப்புரிமை (இல.1),— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாலித ரங்கே பண்டார அவர்களால் 2013 பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

3.

கௌரவ ஜோன் அமரதுங்க,— சிறப்புரிமை (இல.2),— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களால் 2013 பெப்புருவரி மாதம் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

4.

கௌரவ எம்.பீ. பாறூக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"தெல்தொட்ட மஹ்பலுல் உலமா அரபுக் கல்லூரியைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

ஆவணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

அற்றோனித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதிய 1793/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரின் இணக்கப்பாடுடன் கைத்தொழில், வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 22 ஆம் திகதிய 1794/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் கைத்தொழில், வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 சனவரி மாதம் 22 ஆம் திகதிய 1794/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 16.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

17.

ஹங்குரான்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.